மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

ஐ.ஏ.364/17 in ஐ.ஏ.182/16 in அ.வ.எண்.55/2016 எ.ம.சா.1

2018 ம் ஆண்டு மாதம் தேதியில் என்பவரின் சாட்சியாகிய வா.த.சா. ன் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திரு.கே.எஸ்.திருமணி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | பிரபு | தொழில் | - |
| த/பெ க/பெ | - | | ஜாதி | - |
| கிராமம் | - | | வயது | - |
| தாலூக்கா | - | | தேதி | - 17.04.2018 |

முதல் விசாரணை

நான் திப்பம்பட்டி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

குறுக்கு விசாரணை

திப்பட்டி கிராமத்தில் ராமலிங்க சௌடேஸ்வரியம்மன் கோவில் கடந்த 2,3 ஆண்டுகளாக கட்டப்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி கோவில் பாதிவரை கட்டப்பட்டு பாதி கட்டப்பட்டுள்ள நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது. ஷை கோவிலானது திப்பம்பட்டி கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை சார்ந்தவர்களால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல, ஊரில் உள்ள அனைத்து மக்களாலும் கட்டப்பட்டது. ஷை கோவிலை கட்டுவதற்கு முன்பாக அக்கோவில் கட்டுவதற்கான இடத்தை உரிய சர்வே செய்து அதன்பின்புதான் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் ஷை கோவிலை கட்டுவதற்கு முன்பாக அக்கோவிலுக்குண்டான இடத்தை அளவீடு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன கோவிலுக்கும் தென்புறமாக எங்களுடைய வீடு அமைந்துள்ளது. கோவில் கட்டுவதற்கு எவ்விதமான இடையூறும் செய்யக்கூடாது என்று எங்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தின் மூலம் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். ஷை வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டதற்கு பிறகு கோமங்கலம் காவல்நிலையத்தில் வாதி தரப்பில் எங்களுக்கு எதிராக ஒரு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்தப்புகாரானது ஷை கோவிலை கட்டுவதற்கு இடையூறு செய்வதாக வாதிகளின் தரப்பில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், பொது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கோவில் மதில்சுவரை கட்டக்கூடாது என்று நாங்கள் ஆட்சேபணை செய்ததின்பேரில் ஷை புகார் கொடுக்கப்பட்டது. ஆக வாதியின் தரப்பில் நான் மேற்படி

கோவிலை கட்டக்கூடாது என்று தடுக்கப்பட்டதற்காக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவை ரத்து செய்வதற்கோ நீக்கம் செய்வதற்கோ நாளது தேதி வரை எந்த ஒரு நடவடிக்கையும் எங்களது தரப்பில் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்துள்ளோம். நான் சொல்வது போல் ஷை உத்தரவை ரத்து செய்யும் பொருட்டு எந்த ஒரு நடவடிக்கையும் எங்களது தரப்பில் எடுக்கவில்லை நான் மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவிலுக்கு தென்புறமாக உள்ள இடமானது பொது பாதை என்றோ எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றோ நிரூபிப்பதற்கு ஏதுவாக ஆவணங்கள் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் பெறப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமானது தாவா சொத்து விவரத்தில் சொல்லப்பட்ட கோவில் மற்றும் கோவிலை சுற்றியுள்ள இடத்திற்குரியது என்றால் சரிதான். மேற்சொன்ன இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவை ரத்து செய்யாமல் அவ்விடத்தில் இடையூறு செய்ய நான் முற்பட எவ்வித அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலத்தில் கோவிலுக்கு வடபுறத்தில் காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டிருந்தது என்பதையும், அதில் 4 அடி அகலத்தில் எந்த இடத்தில் நீளத்திலா உயரத்திலா சுவர் இடிக்கப்பட்டது என்பதையும் மனுவாதிகளால் நீரூபிக்கப்படவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலம் பாரா 4ல் மனுவில் கூறியுள்ளபடி கோவிலுக்கும் அதை சுற்றியுள்ள சுவருக்கும் நாங்கள் எந்த காலத்திலும் இடையூறு ஏற்படுத்தியதில்லை என்று எனது சாட்சிய நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது வரை இம்மனுவில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை அமலில் உள்ளது என்றால் சரிதான். இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் நிலுவையில் இருக்கும் தருணத்தில் அக்கோவிலை கட்டுவதற்கு தடை செய்ய எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் என்னுடைய இடத்தில் கட்டினால் அதை தடுக்க உரிமை உண்டு. மனுச்சொத்தில் குறிப்பிடப்பட்ட அளவுகளுக்குள் கோவிலை கட்டுவதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. மனுதாரரின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 2ம் ஆவணத்தின்படி ஷை கோவிலை கட்டுவதற்கு முன்பாக எனது பெயருக்கு நில அளவையர் மூலமாக அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு நிலுவையில் இருக்கும் பட்சத்தில், கோவிலை கட்டுவதற்கு எனது தரப்பில் இடையூறு ஏதும் செய்யப்படும் பட்சத்தில் இம்மனுவில் கோரியுள்ளவாறு எனக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எடுக்கப்படவேண்டும் என்று மனுதாரர் தரப்பில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவின்படி கோவிலை கட்டுவதற்கு இடையூறு செய்யக்கூடாது என்று சொல்லப்பட்ட சரத்தினை நான் இந்நீதிமன்றத்திலேயே ஒத்துக்கொண்டுள்ளதால், என்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலேயே கோவில் இடத்தில் கட்டுவதற்கு தடை செய்வேன் என்று சாட்சியம் அளித்துள்ளதால் என்மீது மேற்கூறியவாறு நடவடிக்கை எடுக்க கட்டுப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

என் இடத்தில் கட்டினால்தான் தடுப்பேன் என்று கூறியுள்ளேன். என்னுடைய இடம் என்பதை நிரூபிக்கும் பொருட்டு எந்த ஒரு ஆவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத காரணத்தினாலும், இடைக்கால உறுத்துக்கட்டளை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினாலும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரிதான். ஏற்கனவே இந்நீதிமன்றத்தின் மூலம் பெறப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தின்படி மனுதாரர்கள் கோவில் கட்டுவதை தடுக்க எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரிதான். மேலும் மேற்படி கோவிலில் பணிபுரியும் வேலையாட்களையும் நான் மேற்சொன்ன கோவிலை கட்டுவதற்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-